**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை:க. முனுசாமி, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., பி.எட்., எம்.பில்.,**

ந.க.எண். 1468/மாஒ4/பமேகு/ஒபக/2022, நாள் :21.11.2022

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அனைத்து அரசு பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை ஆற்றல்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் கருத்தாளர்கள் & பார்வையாளர்களுக்கான செயல்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் – சார்பு.

பார்வை: மாநில திட்ட இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2223/C7/பமேகு/ஒபக/2022, நாள்: 01.11.2022

------

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டு மாதந்தோறும் இறுதி வெள்ளிக்கிழமை புதிய உறுப்பினர்களைக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடைபெற்று வருகிறது.

நோக்கம்:

பள்ளி மேலாண்மைக் குழுவினை வலுப்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கையாக, தமிழகம், முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் மறுகட்டமைப்பு செய்யப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழுக்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள பெற்றோர்களை, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் நியமிக்கப்பட்டிருக்கும் கருத்தாளர்களின் வழியே நேரில் சந்தித்து, அவர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழுக்கள் குறித்தும், பணிகள் குறித்தும் ஆழமான புரிதலை உருவாக்கி அதன் வாயிலாக பள்ளி மேலாண்மைக் குழுவை ஆற்றல்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதலுக்கான செயல்பாடுகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் கருத்தாளர்களாக செயல்பட உள்ளவர்களுக்கு மாநிலத் திட்ட இயக்குநரின் கையொப்பம் மற்றும் QR Code உடன் கூடிய அடையாள அட்டை மாநில திட்ட இயக்கத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய அடையாள அட்டை உள்ளவர்கள் மட்டுமே இச்செயல்பாட்டிற்காக பள்ளிகளில் அனுமதிக்கப்படுவார்கள்.

மாவட்டங்களில் செயல்படவிருக்கும் கருத்தாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான வழிகாட்டுதல்களை கீழ்காணும் வகையில் அறிவுறுத்தப்படுகிறது.

**கருத்தாளர்களின் பணிகள்**

- பள்ளி மேலாண்மைக் குழுக்களை ஆற்றல்படுத்துவார்கள்.
- ஒரு நாளைக்கு ஒரு பள்ளி என பணியாற்றுவார்கள்.
- பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர் உறுப்பினர்களைச் சந்தித்து தங்களை அறிமுகம் செய்து கொள்வார்கள்.
- கல்விக் கூட்டம் என்பது பள்ளி மேலாண்மைக் குழுவை வழிநடத்த உறுதுணையாக இருக்கும்.

- கல்விக் கூட்டம் என்பது பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் கல்வியாளர்கள். தன்னார்வலர்கள் ஆகியோரை நேரடியாக சந்தித்து நடத்துவது ஆகும்.
- கல்விக் கூட்டத்தை நடத்துவதற்கு பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களோடு, அந்த பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்களை சந்தித்து கல்விக் கூட்டத்தின் அவசியம் குறித்து பேசுவார்கள்.
- கல்விக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் 20 பேர், பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள், பள்ளியில் படிக்கும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் அல்லாத மற்றக் குழந்தைகளின் பெற்றோர்கள், சமூக நலன் சார்ந்த ஊழியர்கள், பள்ளியின் நலன் கருதி சிந்திப்பவர்கள், பேசுபவர்கள், பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த ஓய்வு பெற்ற அலுவலர்கள், கல்வியாளர்கள் ஆகியோரை சந்தித்து கல்விக் கூட்டம் நடத்துவார்கள்.
- கல்விக் கூட்டம் நடத்துவதற்கான காலத்தை திட்டமிட்டு ஒவ்வொருவரையும் சந்தித்து அவர்களின் கருத்தைக் கேட்டு மாலை நேரங்களில் பள்ளி தலைமை ஆசிரியர் கலந்துக்கொள்வதற்கு ஏதுவாக கல்விக் கூட்டத்தினை நிகழ்த்துவார்கள்.
- இக்கூட்டம் பெற்றோர்களின் வசதிக்கேற்ப மாதம் ஒரு நாள் மாலை 3.00 மணிக்கு மேல் தலைமை ஆசிரியரின் அனுமதியோடு நடத்தப்படும்.
- கல்விக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினரை பள்ளியின் நிலை குறித்து பேசவைப்பார்கள். அதற்கான ஒரு வழிக்காட்டுனராக கருத்தாளர்கள் செயல்படுவார்கள்.
- கல்விக்காக உள்ள கல்வி நிலைக் குழு பள்ளி மேலாண்மைக் குழு, கிராம சபை இவற்றின் அவசியத்தை எல்லோரும் உணர இக்கூட்டம் உதவும்.
- பள்ளியின் தேவை, பள்ளியின் சேர்க்கை, பள்ளியின் கட்டமைப்பு, பள்ளி மேலாண்மை இவை குறித்த புரிதல்களை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு செயலி வழி பயிற்சி வழங்குவார்கள்.
- எளிதாக புரிந்துக்கொள்ளும் வகையில் பயிற்சி சார்ந்த பணிகளை திட்டமிட்டு பயிற்சியளிப்பார்கள், படித்த பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர்கள், படிப்பை தொடர இயலாத பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் என இனம் பிரித்து பாகுபாடின்றி பயிற்சி வழங்குவார்கள்.
- பள்ளியின் தேவைகள் குறித்து பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர் உறுப்பினர்கள் தெரிந்துக்கொள்ள வழிகாட்டுவார்கள்.
- குழந்தைகளின் கல்வி மேம்பாட்டை பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர் உறுப்பினர்கள் வழியாக மற்ற குழந்தைகளின் பெற்றோர்கள் அறிய உறுதுணையாக இருப்பார்கள்.
- தொடக்க பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் செயல்பாட்டில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உறுதுணையாக இருக்க வலியுறுத்துவார்கள்.
- "நம் பள்ளி நம் பெருமை" என்பதனை பள்ளி. மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உணர்வதற்கான அனைத்து எளிய வடிவங்களுடன் கூடிய நேரடி பயிற்சி வழங்குவார்கள்.
- பள்ளிக் கல்வித் துறை தரும் சிறப்பு திட்டங்களுக்கான உடனடி பணிகளை அவசியம் கருதி பரப்புரையாக எடுத்துச் செல்வது கருத்தாளர்களின் அவசியப் பணியாகும். (உம் காலை உணவுத்திட்டம், கலைவழிக் கல்வித் திட்டம் போன்றவை).
- ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளியன்று நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம், கிராம சபை அல்லது சிறப்பு கிராம சபை கூட்டங்களி பள்ளி

மேலாண்மைக் குழு உறுப்பினர்களை பங்குகொள்ள வழி காட்டுவார்கள், மேலும் இக்கூட்டங்களில் கருத்தாளர்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்வார்கள்.

- கிராம மக்களையும் பள்ளியையும் இணைக்கும் பாலமாக செயல்படுவார்கள்.
- ஒவ்வொரு நாளும் தெளிவாக திட்டமிட்டு பள்ளி மேலாண்மைக் குழுவை முறைப்படுத்துவார்கள்.
- பள்ளி மேலாண்மைக் குழுவின் பணிகள் குறித்து மேலாண்மைக் குழு தலைவரை பேச வைத்தல், பள்ளியின் தேவையினை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுடன் பகிர்தல், பள்ளி மேம்பாட்டுத் திட்டம் செயலிக்கான அவசியம் பற்றி சொல்வது, இவை அனைத்தும் கல்விக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை வைத்து வழங்கப்பட வேண்டும்.
- பள்ளிக் குழந்தைகளின் சேர்க்கை, இடைநின்ற குழந்தையை மீண்டும் பள்ளியில் சேர்ப்பது, பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பை பெறுவது, குழந்தைகள் உரிமை, பாதுகாப்பு இவை குறித்த தெளிவை கல்விக் கூட்டத்தில் பேசுவார்கள்.
- பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த, மேற்கல்வி தொடராத உயர்கல்வி வழிகாட்டுதல் தேவைப்படும் மாணவர்களின் விவரங்களை சேகரித்து சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்குத் தெரியப்படுத்துதல்.
- முதல் 3 மாதங்கள், ஒதுக்கப்பட்ட பள்ளிகளில் கல்விக் கூட்டங்களை நடத்துவார்கள்.
- அடுத்த 3 மாதங்களில் பள்ளி மேம்பாட்டுத் திட்டச் செயலி வழியாக பள்ளியின் தேவையை பூர்த்தி செய்ய உதவியாக இருப்பார்கள்.
- இறுதி மாதத்தில் பள்ளி மேலாண்மைக் குழு வளர்ச்சி குறித்து ஆய்வு மேற்கொள்ளுவார்கள், சிறந்த பள்ளி மேலாண்மைக் குழுவை அடையாளம் காண உதவுவார்கள்.
- இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள், பள்ளியின் பழைய மாணவர்கள், காலை உணவுத் திட்ட கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் கல்விக் கூட்ட பங்கேற்பாளர்கள் கொண்ட ஒரு சிறப்பு புலனக்குழுவை (WhatsApp) உருவாக்கி அதன் மூலம் கல்விக் கூட்ட உறுப்பினர்களை பள்ளி மேலாண்மைக் குழுவை ஆற்றல் படுத்த பாலமாக இருப்பார்கள்.
- தினசரி அறிக்கை படிவத்தை அலைபேசி வழியாக மாவட்ட கருத்தாளருக்கு ஒன்றிய கருத்தாளர்கள் அனுப்புவார்கள்.
- மாவட்ட கருத்தாளர் மாதமொருமுறை நேரடியாக நடத்தும் பணி அறிக்கை ஆய்வு கூட்டத்தில் பங்கேற்பார்கள்.
- வாரம் ஒரு முறை இணைய வழிக்கூட்டத்தில் மாவட்ட கருத்தாளர் தரும் பணிகளை ஒன்றிய கருத்தாளர்கள் திட்டமிடுவார்கள்.
- இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கருத்தாளர்கள் மாவட்ட அளவில், மண்டல அளவில் தரப்படும் பயிற்சியில் பங்கேற்பார்கள்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை மரியாதையுடன் நடத்தி அவர்களின் பள்ளி குறித்த புரிதல்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

**மாவட்டக் கருத்தாளராக செயல்படும் 1 நபர்களின் கூடுதல் பணிகள்:**

- கருத்தாளர்களின் பணிகளாக மேலே உள்ள அனைத்து பணிகளையும் மாவட்ட கருத்தாளர்கள் வழிநடத்துவார்கள்.
- மாவட்ட கருத்தாளர்கள், மாவட்டத்தில் ஒன்றிய அளவில் செயல்படும் கருத்தாளர்களை தினசரி தொடர்பு கொண்டு, அவர்களின் அன்றாட நடவடிக்கைகளை பெற்றுக்கொள்வார்கள்.
- இதனை அறிக்கையாக தயார் செய்த மாநில அளவில், மாதந்தோறும் நடைபெறும் கலந்தாய்வு கூட்டத்தில் சமர்ப்பிப்பார்கள்.

- இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மாநில அளவில் நடைபெறும் கல்ந்தாய்வு கூட்டம் மற்றும் பயிற்சியில் கலந்து கொள்வார்கள்.
- இந்தக் கூட்டத்தில் அவர்கள் மாவட்டத்தில் ஒரு மாதம் முழுவதும் நடந்த கருத்தாளர்களின் பணிகளை அறிக்கையாக சமர்ப்பிப்பார்கள். மேலும் அடுத்த மாதத்திற்கான களச் செயல்பாடுகளுக்கான பயிற்சியினை பெற்றுக்கொள்வார்கள்.
- மாநில அளவில் பெற்ற பயிற்சிகளை, ஒன்றியங்களில் செயல்படும் கருத்தாளர்களுக்கு மாவட்ட கருத்தாளர்கள் பயிற்சி அளிப்பார்கள்.
- மாவட்ட கருத்தாளர்கள் அவரவர் மாவட்டத்திற்கான WhatsApp குழு அமைத்து அதில் பள்ளி மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர்களை (SMC DC ) இணைத்தல் வேண்டும்.

**கருத்தாளர்களுக்கான செயலி**

களத்தில் பயணிக்கும் கருத்தாளர்களின் தினசரி பணிகள், அவர்களின் அறிக்கைகள், கருத்துகள், களத்தில் சேகரிக்கும் தகவல்கள் என அனைத்தும் பகிர்ந்த கொள்ளவும், நேரடியாக மாநில திட்ட இயக்ககத்துடன் தொடர்பில் இருக்கவும், தரவுகளை உடனடியாக பகிர்ந்து கொள்ளவும் பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்களுக்கென தனிச் செயலி ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

**1. மாநில மற்றும் மண்டல அளவிலான பயிற்சி**

20.08.2022 மற்றும் 21.08.2022 அன்று மாவட்ட ஒருங்கிணைப்பாளருக்கு சென்னையில் மாநில அளவிலான பயிற்சி நடத்தப்பட்டது.

மாநில அளவில் இரண்டு நாள் பயிற்சி பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்டு, ஒன்றிய அளவிலான கருத்தாளர்களுக்கு மண்டல அளவில் 27.08.2022 மற்றும் 28.08.2022 ஆகிய தேதிகளில் (சென்னை, சேலம், மதுரை மற்றும் திருச்சி) பயிற்சி வழங்கப்பட்டது.

**2. மாவட்ட வாரியான கலந்தாய்வு கூட்டங்கள் / பயிற்சி:**

மாநில அளவில் நடைபெற்ற பயிற்சியினை அடிப்படையாகக் கொண்டு இரண்டு மாதங்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சி நடைபெறும். இந்த பயிற்சியினை மாநில அளவில் பயிற்சி பெற்ற மாவட்டக் கருத்தாளர் வழங்குவார்கள்.

இத்திட்டம் ஏற்படுத்தும் தாக்கம்:

- தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழுக்களை வலுப்படுத்தும்.
- பள்ளி மேலாண்மைக் குழுவில் உள்ள பெற்றோர்களுக்கு அவர்களின் பணிகள் குறித்த முழுமையான புரிதலை ஏற்படுத்தும்.
- பள்ளி மேலாண்மைக் குழுவில் உள்ள பெற்றோர்களை தனித்தனியாக சந்தித்து அவர்களின் கல்விநிலை அறிந்து பள்ளி மேலாண்மைக் குழு குறித்த தகவல்களை முழுமையாக புரிய வைத்து ஆற்றல்படுத்த உதவும்.
- பள்ளிகள் கல்விக் குழுக்களை உருவாக்கவும், அது திறம்பட இயங்கவும் வழிகாட்டும்.
- சிறந்த பள்ளி மேலாண்மைக் குழுவை அடையாளம் காண உதவும்.
- மறுகட்டமைப்பு செய்யப்பட்ட நிலையில் தன்மையை உருவாக்க அந்தந்த ஒன்றியப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட கருத்தாளர்கள் உதவுவதை உறுதிபடுத்தும்.
- பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை சரியான முறையில் செயல்படுத்த செயலியை பயன்படத்தி திட்டமிட பள்ளி மேலாண்மைக் குழுவில் உள்ள பெற்றோர் உறுப்பினர்களுக்குத் துணை புரியும்.

மாவட்ட கருத்தாளர் மற்றும் ஒன்றிய கருத்தாளர்கள், மாவட்ட பள்ளி மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர்களை (SMC DC) பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை (மாத்த்தில் இரண்டாம் வாரம் மற்றும் நான்காம் வாரத்தில்) சந்தித்து கலந்தாலோசனை நடத்தப்படுமென அறிவுத்தப்படுகிறது.

மாதந்தோறும் இச்செயல்பாட்டின் தொகுப்பறிக்கை மற்றும் மாவட்ட கருத்தாளர் மற்றும் கருத்தாளர்களின் வருகைப்பதிவு ஆகியவற்றை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

ஒன்றியங்களில் பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்கள் மார்ச் மாதம் வரை இச்செயல்பாடுகளை மேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**

1. மாவட்டக் கருத்தாளர் மற்றும் ஒன்றிய கருத்தாளர்களின் பெயர் பட்டியல் விவரம்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்.

21/11/2022

**பெறுநர்:**

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கநிலை) வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
4. அனைத்து அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்கள். (மேற்பார்வையாளர்கள் (பொ) மூலமாக)
5. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ).

**நகல்:**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. முதல்வர், இராணிப்பேட்டை அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.

## Samagra Shiksha - Vellore District

## SMC Resource Persons and Observers Details

| S no | District | Name of the Block | Name (Mr/Mrs) | Contact Number |
|---|---|---|---|---|
| 1 | Vellore | Vellore Urban | L.Rajinikanth (District Coordinator) | 9442713152 |
| 2 | | Vellore Uban | U.Balasundaram | 9047716836 |
| 3 | | Vellore Rural | M.Ramya | 9344856304 |
| 4 | | Vellore Rural | S.Selvachandran | 9843927937 |
| 5 | | Kaniyanbadi | R.Aruna | 7010495462 |
| 6 | | Anaicut | R.Jayapriya | 7202952212 |
| 7 | | Anaicut | D.Priya | 9566366734 |
| 8 | | Katpadi | G.Aravindhan | 8220353830 |
| 9 | | Katpadi | A.Kanimozhi | 7826854672 |
| 10 | | K.V.Kuppam | V.Kumaran | 9629630694 |
| 11 | | K.V.Kuppam | N.G.Ramakrishnan | 9943949521 |
| 12 | | Gudiyattam | D.Gurunathan | 9500893375 |
| 13 | | Gudiyattam | G.Suganthi | 8015232344 |
| 14 | | Pernambut | C.Hepcy | 9360521233 |